**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சோளிங்கர், வேலூர் மாவட்டம்,**
**முன்னிலை திருமதி. V. VANNAMALAR, M. L., PGDIPR, PGD. Crl. & Frn. Sc.**
**நீதித்துறை நடுவர், சோளிங்கர்.**

2017ம் ஆண்டு ஜீலை மாதம் 18ம் நாள் செவ்வாய்க்கிழமை
ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.01/2017

அரசுக்காக காவல் துறை சிறப்பு உதவி ஆய்வாளர்,
கொண்டபாளையம் காவல் நிலையம்,
குற்ற எண்.209/2016. .......குற்றமுறையிடுபவர்

//எதிராக//

WEB COPY

தேவராஜ், வயது 25, த/பெ.கணேசன், .......எதிரி
நெ.267, பிள்ளையார் கோயில் தெரு,
நீலகண்டராயன் பேட்டை,
வாலாஜா வட்டம், வேலூர் மாவட்டம்.

இந்த வழக்கு இந்நீதிமன்றத்தில் 05.01.2017ம் தேதியன்று இ.த.ச பிரிவுகள் 379 மற்றும் 430ன் கீழ் இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் அவர்களும், எதிரி தரப்பில் வழக்கறிஞர்கள் திருவாளர்கள்.ஒய்.சி.ரகுராமராஜு மற்றும் எஸ்.சக்கரவர்த்தி அவர்களும் முன்னிலை ஆகி இருதரப்பு வாதங்களையும் வழக்கு ஆவணங்களையும் பரிசீலித்து பின்னர் இன்று இந்த நீதிமன்றம் வழங்கும்

<u>தீர்ப்பு ரை</u>

கடந்த 28.07.2016ம் தேதி இரவு 23.30 மணிக்கு கொண்டபாளையம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட வாலாஜாவிலிருந்து சோளிங்கர் செல்லும் சாலையில் ஜம்புகுளம் கூட்ரோடிடம் எதிரி தன்னுடைய லாரி பதிவு எண்.TN20 AV1397, Ashok Leyland Lorryயில் அரசு அனுமதியின்றி நிலத்தடி நீர் ஆதாரத்தை குலைக்கும் வகையில் கள்ளத்தனமாக சுமார் 3 யூனிட் மணலை ஏற்றி வந்ததாக எதிரி மீது இ.த.ச.பிரிவுகள் 379 மற்றும் 430ன் கீழ் கொண்டபாளையம் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையானதும் அரசு தரப்பு வழக்கின் ஆவணங்களின் அனைத்து நகல்களும் எதிரிக்கு கு.வி.மு.ச பிரிவு 207 வலியுறுத்துவது போல இலவசமாக வழங்கி குற்றம் குறித்து வினவியபோது எதிரி குற்றத்தை மறுத்தார். இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு, ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டதில், எதிரி குற்றம் புரிந்திருக்க சாத்திய கூறுகள் உண்டு என தீர்மாணித்து எதிரியின் மீது இ.த.ச. பிரிவுகள் 430 மற்றும் 379ன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து விளக்கம் கூறி வினவியபோதும் எதிரி குற்றத்தை மறுத்தார். எதிரி குற்றத்தை மறுத்தமையால் அரசு தரப்பு சாட்சிகளுக்கு அழைப்பாணைகள் அனுப்ப உத்தரவிடப்பட்டது.

WEB COPY

3. அரசு தரப்பில் 2 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, 7 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டன. அரசு தரப்பீல் பட்டியல் சாட்சி ஒருவர் விலக்கிக் கெள்ளப்பட்டுள்ளார். அரசு தரப்பில் சான்றுப் பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. எதிரி தரப்பில் சாட்சிகள் எவரும் விசாரணை செய்யப்படவில்லை.

**4.அரசு தரப்பில் விசாரணை செய்யப்பட்ட சாட்சிகளின் சாட்சிய சுருக்கம் பின்வருமாறு:-**

5. அ.சா.1.திரு.ஜெய்குமார், சிறப்பு உதவி ஆய்வாளர், தனது சாட்சியத்தில் தான் தற்போது கொண்டபாளையம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும், கடந்த 28.07.2016ம் தேதி 23.30 மணிக்கு மருதாலம் கூட்ரோடிலிருந்து ஜம்குளம் கூட்ரோடு அருகே சாலை ரோந்து பணியில் ஈடுபட்டு இருந்தபோது அசோக் லைலாண்ட் லாரி பதிவு எண்.TN20 AV1397 என்ற வண்டியை சந்தேகத்தின் பேரில் நிறுத்தியதாகவும், ஆனால் அதன் ஓட்டுநர் ஆன எதிரி வண்டியை நிறுத்தாமல் அதிவேகமாக சென்றதன் பேரில் அந்த லாரியை மடக்கி பிடித்து அதில் சோதனை செய்தபோது லாரியில் அரசு விதிமுறைகளுக்கு மாறாக எவ்வித அரசு அனுமதியின்றி திருட்டு மணல் இருந்ததாகவும், லாரியின் ஓட்டுநரை விசாரிக்க அவர் திருட்டில் ஈடுபட்டதாக ஒப்புக்கொண்டதன் பேரில் கொண்டபாளையம் காவல் நிலையத்தில் எழுத்துமூலமாக புகார் மனு அ.த.சா.ஆ.1 அளித்ததாகவும், பின்னர் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.மூர்த்தி சம்பவயிடத்திற்கு சென்று தான் மற்றும் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.வரதராஜுலு முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் அ.த.சா.ஆ-2 மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து கொண்டதாகவும், இந்த பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையெழுத்து தன்னுடையதுதான் என்றும், பின்னர் வழக்கு சொத்தான லாரியை 29.07.2016 அன்று காலை 05.30 மணியிலிருந்து 06.00 மணிக்குள்ளாக தனது மற்றும் சிறப்பு உதவி ஆய்வாளர் வரதராஜுலு முன்னிலையிலும், கைப்பற்றுதல் மகஜர் அ.த.சா.ஆ-3ன் மூலம் வழக்குசொத்தை கைப்பற்றியதாகவும், அந்த கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையெழுத்து தன்னுடையதுதான் என்றும் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.மூர்த்தி அவர்கள் தன்னை விசாரித்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

WEB COPY

6. அ.சா.2. திரு.மூர்த்தி, தனது சாட்சியத்தில் தான் தற்போது கொண்டபாளையம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிவதாகவும், கடந்த 28.07.2016ம் இரவு 23.30 மணிக்கு ரோந்து பணியில் ஈடுப்பட்டு இருந்த சிறப்பு உதவி ஆய்வாளர்கள் ஜெய்குமார், வரதராஜலு ஆகியோர், மணல் திருட்டில் ஈடுபட்ட அசோக் லைலாண்ட் லாரியின் பதிவு எண்.TN20 AV1397 என்ற வாகனம் மற்றும் அதன் ஒட்டுநர் ஆன எதிரியுடன் நிலையம் சேர்ந்து எழுத்து மூலமாக புகார் அளித்ததை பெற்று குற்ற எண்.209/2016, சட்டப்பிரிவுகள் 379 மற்றும் 430ன் கீழ் முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ-4 பதிவு செய்து கொண்டதாகவும், எதிரியை காவல் நிலையத்தில் கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியதாகவும், பின்னர் சம்வயிடம் சென்று சாட்சிகள் ஜெய்குமார், வரதராஜலு ஆகியோர் முன்னிலையில் மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ-5 மற்றும் பார்வை மகஜர் தயார் செய்து கொண்டதாகவும், வழக்கு சொத்தினை படிவம் 95 அ.த.சா.ஆ.6ன் மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும் இவர் அடையாளம் காட்டியதன் அடிப்படையில் அரசு தரப்பில் வழக்குசொத்தான லாரியின் புகைபடங்கள் (4 வரிசை) அ.த.சா.ஆ.7ஆக குறியீடு செய்துக் கொள்ளப்பட்டது. மேலும் இவர் சாட்சிகள் 1 மற்றும் 2 ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலங்கள் பெற்றதாகவும், தனது புலன் விசாரணையை முடித்து எதிரியின் மீது இ.த.ச.பிரிவுகள் 379 மற்றும் 430ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

7. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில் எதிரிக்கு பாதகமான பகுதிகளை கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் சுட்டிக்காட்டி வினவியபோது எதிரி சாட்சியங்கள் பொய் என்றும் தன் தரப்பில் சாட்சிகள் உண்டு என்றும் கூறினார். பின்னர் எதிரி தரப்பு சாட்சிகள் இல்லை என்று கூறி எதிரி தரப்பு சாட்சியம் முடித்துக் கொள்ளப்பட்டது.

WEB COPY

8. இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில் அரசு தரப்பால் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தகுநிலை ஐயத்திற்கு இடமின்றி நிரூபிக்கப் பட்டுள்ளதா? இல்லையா? என்பதேயாகும்.

**9. தீர்வு :-**

10. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

11. அரசு தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் அ.சா.1 முதல் 2 வரையிலான சாட்சிகளின் மூலமாகவும் அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ-7 வரையிலான சான்றாவணங்கள் மூலமாகவும் அரசு தரப்பு வழக்கினை மெய்ப்பித்துள்ளதாகவும் எனவே எதிரிக்கு தண்டனை வழங்க வேண்டும் என்றும் வாதிட்டார். எதிரி தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் அரசு தரப்பில் எதிரியின் மீதான குற்றச்சாட்டுகள் மெய்ப்பிக்கப்படவில்லை என்றும், எனவே எதிரியை இந்த வழக்கிலிருந்து விடுதலை செய்யவேண்டும் என்றும் வாதிட்டார்.

WEB COPY

*12.* அ.சா.1 குறுக்கு விசாரணையில் தான் சம்பவம் நடந்த சமயத்தில் Highway Patrol-ல் பணியில் இருந்ததாகவும், தான் இந்த வழக்கின் புகாரை எழுதியதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். இந்நிலையில் எதிரி தரப்பில் இருந்து இந்த வழக்கின் புகாரில் உள்ளது கோமதி என்ற பெண் காவலரின் கையொப்பம் என்று கூறியபோது சாட்சி அதை ஒப்புக் கொண்டுள்ளார். மேலும் தான் சொல்ல சொல்ல மேற்படி கோமதி என்ற பெண் காவலர் அந்த புகாரை எழுதியதாகவும் மாற்றி கூறியுள்ளார். மேலும் இந்த வழக்கு சம்பவத்தில் கைப்பற்றப்பட்டதாக கூறப்படும் வாகனத்தை இரவு 11.00 மணிக்கு கைப்பற்றப்பட்டதாகவும், மேற்படி வாகனத்தை தான் பிடித்து வந்ததாகவும், அந்த வாகனத்தை பிடித்தவுடன் நேராக கொண்டபாளையம் காவல் நிலையத்திற்கு இரவு 11.30

மணிக்கு வண்டியுடன் வந்து புகார் அளித்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அது இரவு என்பதால் அந்த வண்டியின் இன்ஜின் எண் மற்றும் சேஸிஸ் எண் அந்த நேரத்தில் தன்னால் பார்க்க இயலவில்லை என்றும் தெரிவித்துள்ளார். எனினும் இந்த வழக்கின் புகாரில் கைப்பற்றப்பட்ட வண்டியின் வண்டியின் இன்ஜின் எண் மற்றும் சேஸிஸ் எண் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் காவல் நிலையத்திற்கு வண்டியை ஓட்டி வந்து கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து அதில் சாட்சி கையொப்பம் செய்ததாகவும், மேலும் பார்வை மகஜர் அ.த.சா.ஆ-2ல் உள்ள சாட்சி கையொப்பம் தன்னுடையது என்றும், அதை காவல் நிலையத்தில் வைத்து தான் போட்டதாகவும், சிறப்பு உதவி ஆய்வாளர் வரதராஜுலு என்பவரும் தன்னுடன் பார்வை மகஜரில் சாட்சி கையொப்பம் இட்டதாகவும், அவரும் தன்னுடன் காவல் நிலையத்திலேயே கையொப்பம் செய்ததாகவும் தெரிவித்துள்ளார். மேலும் சம்பவத்தினத்தன்று கைப்பற்றப்பட்ட வண்டியிலிருந்தது மணல் என்றும், அது எங்கிருந்த களவாடப்பட்டது என்ற விவரம் தனக்கு தெரியாது என்றும், இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.2 தன்னிடம் அந்த மணல் எங்கிருந்து திருடப்பட்டது என்பது குறித்து விசாரிக்கவில்லை என்றும், இந்த வழக்கின் எதிரி தன்னிடம் எந்தவொரு வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றும், நிலத்தடி நீர் பாதிக்கப்பட்டதாக எந்தவொரு புகாரும் இந்த வழக்கு சம்மந்தமாக எவரும் கொடுக்கவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார். இவரது சாட்சியத்தினை உற்று நோக்கும் போது மேற்படி இந்த வழக்கின் புகாரின் நம்பகத்தன்மை கேள்விகுறியாகிறது. இந்த வழக்கின் புகார்தாரரான அ.சா.1றே அவரது புகாரைச் சார்ந்து சாட்சியம் அளிக்கவில்லை. அவரது புகாரில் வண்டியின் இன்ஜின் எண் மற்றும் சேஸிஸ் எண் குறிப்பிட்டுவிட்டு சம்பவ தினத்தன்று இருட்டாக இருந்தது என்றும், மேற்படி வண்டியின் இன்ஜின் எண் மற்றும் சேஸிஸ் எண் புகார் கொடுக்கும் நேரத்தில் தனக்கு தெரியாது என்றும் மாற்றி கூறியிருக்கிறார். மேலும் இவரது முதல் விசாரணையில் இந்த

WEB COPY

வழக்கின் புகாரை தான் எழுதியதாக கூறிவிட்டு பிறகு அதை தான் சொல்ல சொல்ல கோமதி என்ற பெண் காவலர் எழுதியதாக மாற்றி கூறியுள்ளார். கைப்பற்றப்பட்ட வண்டியை தான் காவல் நிலையத்திற்கு கொண்டு வந்து ஒப்படைத்ததாக தெரிவித்துள்ளார். எனினும் அரசு தரப்பு வழக்கில் இந்த வழக்கின் சம்பவத்தில் ஈடுபட்ட வண்டி TN20AV1397 என்ற பதிவு எண் கொண்ட லாரியானது 29.07.2016ம் தேதி காலை 05.30 மணியிலிருந்து 06.00 மணிக்குள்ளாக ஜம்புகுளம் கூட்ரோடிடம் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதே நேரத்தில் இந்த வழக்கின் முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ-4 காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கில் பிடிக்கப்பட்ட வண்டியானது காவல் நிலையத்திற்கு கொண்டு வந்து அ.சா.1, 28.07.2016 அன்று ஒப்படைத்ததாக கூறும் நிலையில் அதே வண்டி மறுதினம் அ.சா.2ஆல் ஜம்புகுளம் கூட்ரோடு அருகே கைப்பற்றப்பட்டதாக கூறுவது அரசு தரப்பு வழக்கின் உண்மை தன்மையையும், சாட்சிகளின் நம்பகத்தன்மையையும் சந்தேகிக்க வைக்கிறது.

WEB COPY

13. அ.சா.2 இந்த வழக்கின் விசாரணை அதிகாரி. இவர் குறுக்கு விசாரணையில் இந்த வழக்கு சம்மந்தமான லாரி மணலுடன் காவல் நிலையத்திற்கு கொண்டு வந்து ஒப்படைக்கப்பட்டதா அல்லது ஜம்புகுளம் கூட்ரோட்டிடம் கைப்பற்றப்பட்டதா என்பது பற்றி சரியான விளக்கம் எதுவும் குறிப்பிடாமல் முன்னுக்கு பின் முரணாக மாற்றி மாற்றி சாட்சியம் அளித்துள்ளார். மேலும் இந்த வழக்கில் விசாரணை அதிகாரி வழக்கு புகாரை பெற்றவுடன் சம்பவயிடம் சென்றதாகவும், அதன் பிறகு 6 மணி நேரம் கழித்து தான் இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும் சம்பவயிடத்திற்கு சென்று இந்த வழக்கின் அனைத்து ஆவணங்களையும் தயார் செய்த பிறகே முதல் தகவல் அறிக்கை

பதிவு செய்ததாக கூறியுள்ளார். இந்த வழக்கின் ஆவணங்களையும், சாட்சியங்களையும் உற்று நோக்கும் போது இந்த வழக்கின் புகார் 28.07.2016 அன்று இரவு 11.30 மணிக்கு அ.சா.1 கொடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த வழக்கின் பார்வை மகஜர் 28.07.2014 அன்று இரவு 12.45 மணிக்கு தயார் செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் பார்க்கும் போது வழக்கு புகார் கொடுப்பதற்கு 2 வருடங்கள் முன்னதாகவே மேற்படி ஆவணங்கள் தயார் செய்யப்பட்டதாக தெரிகிறது. மேலும் இந்த வழக்கின் கைப்பற்றுதல் மகஜரானது 29.07.2016 அன்று காலை 05.30 மணியிலிருந்து 06.00 மணிக்குள்ளாக தயார் செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கையானது 29.07.2016 அன்று காலை 05.30 மணிக்கு தயார் செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த வழக்கில் புகாரினை இரவு 11.30 மணிக்கு பெற்றுவிட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யாமல் சம்பவயிடத்திற்கு சென்று கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்ததாகவும், பிறகு அந்த கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்த அதே நேரத்தில் காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை தயார் செய்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இது எவ்வாறு சாத்தியம் என்பது கேள்விக்குறியாகவே இருக்கிறது. மேலும் இந்த வழக்கின் பார்வை மகஜரானது சம்பவத் தேதிக்கு 2 வருடங்களுக்கு முன்னதாகவே தயார் செய்யப்பட்டது போல் 28.07.2014 என தேதி குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் இந்த வழக்கில் மணல் கடத்த முயற்சிக்கப்பட்டதாக குறிப்பிட்டுள்ள போதிலும், அந்த மணல் எங்கிருந்து கடத்தப்பட்டது என்பதற்கான எந்தவொரு குறிப்பும் இந்த வழக்கின் ஆவணங்களில் தென்படவில்லை. மேலும் அது குறித்து விசாரணை அதிகாரியும் தனது சாட்சியத்தில் எந்தவொரு விளக்கமும் அளிக்கவில்லை. மேலும் இந்த வழக்கில் கைப்பற்றப்பட்ட வண்டி புகார்தாரரே பிடித்த காவல் நிலையத்தில் ஒப்படைத்ததாக குறிப்பிட்டுள்ள போது சம்பவயிடத்திற்கு சென்று வண்டியை கைப்பற்றியதாக புலன் விசாரணை அதிகாரி கூறியுள்ளது ஏற்றுக் கொள்ளக்

WEB COPY

கூடியதாக அமையவில்லை. மேலும் இந்த வண்டி பிடிக்கப்பட்டதாக குறிப்பிட்டிருக்கும் ஜம்புகுளம் கூட்ரோடு என்பது அதிக கடைகள் நிறைந்த பகுதி என்றும், போக்குவரத்து நிறைந்த பகுதி என்றும் அ.சா.2 தெரிவித்துள்ளார். அவ்வாறு இருக்கையில் எந்த ஒரு தனி நபர் சாட்சியமும் இந்த வழக்கில் சேர்க்கப்படாமல் காவல் துறையினரை இந்த வழக்கில் சாட்சியாக சேர்த்திருப்பது அரசு தரப்பு வழக்கிற்கு கேடு உடையதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது. இவை அனைத்தையும் ஒட்டுமொத்தமாக ஆராய்ந்து நோக்குமிடத்து இந்த வழக்கினை இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரி சரிவர புலன் விசாரணை மேற்கொள்ளவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

14. மேலும் இவ்வழக்கில் தனி நபர்கள் எவரும் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை. அரசு தரப்பின் ஆவணமான கைப்பற்றுதல் மகஜரில் சாட்சி கையொப்பமிட்ட அனைவரும் காவல் துறையினரே ஆவர். இவர்கள் அரசு தரப்பிற்கு சாதகமாக சாட்சியம் அளிக்க வாய்ப்புக்கள் உண்டு. இந்த வழக்கில் அரசு தரப்பில் தனி நபர் எவரையும் சாட்சியாக விசாரிக்காமல் அரசு தரப்பினரே சாட்சியாக விசாரிக்கப்பட்டது. அரசு தரப்பு வாதத்திற்கு வலுவூட்டக்கூடியதாக கருத நியாயமில்லை என்றே இந்த நீதிமன்றம் கருதுகிறது. மேலும் இந்த வழக்கில் அரசு தரப்பு சாட்சிகள் அனைவரும் முன்னுக்கு பின் முரணாகவும், அரசு தரப்பு வழக்கிற்கு முரணாகவும் சாட்சியம் அளித்துள்ளனர். எனவே எதிரி மீதான இ.த.ச. பிரிவுகள் 379 மற்றும் 430-ன் கீழான குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பில் போதுமான சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலமாக சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

WEB COPY

15. <u>முடிவில் :-</u>

16. மேற்குறிப்பிட்ட காரணங்களை கருத்தில் கொண்டு, அரசு தரப்பில் இவ்வழக்கினை தகுநிலை ஐயத்திற்கு இடமின்றி நிரூபிக்க தவறிவிட்டதாக முடிவு செய்து எதிரியின் மீது சுமத்தப்பட்ட இ.த.ச.பிரிவுகள் 379 மற்றும் 430ன் கீழான குற்றச்சாட்டுக்களை, ஐயம்திரிபற அரசு தரப்பு நிரூபிக்கவில்லை என தீர்மானித்து, எதிரியை மேற்சொன்ன பிரிவுகளின் கீழ் குற்றவாளி அல்லர் என்று தீர்மானித்து எதிரியை கு.வி.மு.ச பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

17. இவ்வழக்கில் சி.பி 101/2016-ல் கண்ட வழக்கு சொத்தான Ashok leyland Lorry TN 20 AV 1397 என்ற பதிவு எண் கொண்ட வண்டியை ஏற்கனவே இடைக்கால பொறுப்பாக மனுதாரர் தேவராஜ் என்பவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதை மேல் முறையீட்டு காலத்திற்கு பிறகு அவரே வைத்துக் கொள்ளவும் பிணை ரத்தாகவும் உத்தரவிடப்படுகிறது.

WEB COPY

இந்த தீர்ப்புரை முழுவதும் என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிக்கப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு இன்று 2017ம் ஆண்டு ஜீலை மாதம் 18ம் நாள், செவ்வாய்க்கிழமை என்னால் அவையறிய பகரப்பட்டது.

Sd/- (V.Vannamalar)
நீதித்துறை நடுவர்,
சோளிங்கர்.

<u>பின் சேர்க்கை :-</u>

<u>அரசு தரப்பு சாட்சிகள் :-</u>

அ.சா.1 திரு. ஜெய்குமார், சிறப்பு உதவி ஆய்வாளர்
அ.சா.2 திரு. மூர்த்தி, சிறப்பு உதவி ஆய்வாளர்

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள் :-</u>**

| | | |
|---|---|---|
| அ.த.சா.ஆ.1 | 28.07.2016 | புகார் மனு |
| அ.த.சா.ஆ.2 | 28.07.2014 | பார்வை மகஜர் |
| அ.த.சா.ஆ.3 | 29.07.2016 | கைப்பற்றுதல் மகஜர் |
| அ.த.சா.ஆ. 4 | 29.07.2016 | முதல் தகவல் அறிக்கை |
| அ.த.சா.ஆ. 5 | 28.07.2016 | மாதிரி வரைபடம் |
| அ.த.சா.ஆ. 6 | 29.07.2016 | படிவம் 95 |
| அ.த.சா.ஆ. 7 | - | TN20 AV1397 லாரியின் புகைபடங்கள் (4 வரிசை) |

**<u>அரசு தரப்பு சான்றுபொருள் :-</u>** இல்லை

**<u>எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் மற்றும் சான்றுபொருள் :-</u>**
இல்லை

**<u>குறிப்பு :-</u>**

WEB COPY

1) தீர்ப்பின் முடிவு குறித்து சம்மந்தப்பட்ட காவல் நிலையத்திற்கு தெரிவிக்கப்பட்டது.
2) வழக்கு விசாரணைக் காலத்தில் எதிரி பிணையில் இருந்தார்.
3) சாட்சிகள் எவரும் 3 நாட்களுக்கு மேல் நிறுத்திவைக்கப்படவில்லை.

Sd/- (V.Vannamalar)
நீதித்துறை நடுவர்,
சோளிங்கர்.